1981 ஜனவரி 31]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:— திண்டுக்கல் வந்து ஏறுகிற பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அதற்கேற்ப அந்த வழியாகப் போகிற எல்லாப் பேருந்துகளிலும் இருக்கைகள் ஒதுக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராகயிருக்கிறது.

திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: சென்னை-பொள்ளாச்சிக்கு சொகுசு வண்டிகள் (சூப்பர் டீலக்ஸ்) விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று பேருந்து இருப்பதைப்பொறுத்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு கே. குப்புசாமி: பொள்ளாச்சியில் இருந்து திண்டுக்கல் வழியாக சென்னை வருகிற இந்த சொகுசு பேருந்தை பழனி வழியாக விட உத்தேசமுண்டா? அப்படியென்றால் பழனியில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு பயணிகள் ஏறுவதற்கான ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: நமக்கிருக்கிற பேருந்துகளில் தோராயமாக 42 இருக்கைகள்தான் இருக்கும். ஒவ்வொரு ஊருக்கும் எவ்வளவு ஒதுக்கமுடியும் என்றுபார்த்து பழனிவழியாக பேருந்து வருவதில் அதற்கான ஒதுக்கீடு செய்யப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள்

*வினா எண். 140 திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தற்பொழுது எத்தனை கால்நடை மருந்தகங்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன?

(ஆ) இரண்டுக்கும் குறைவாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களில் அதிக கால்நடை மருந்தகங்கள் திறக்க அரசு நடவடிக்கை ஏதும் மேற்கொண்டுள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ)ஒன்று முதல் மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) அரசின் கொள்கைப்படி தேவையின் அடிப்படையில் கூடுதல் கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொருத்தும் அருகாமையில் இருக்கும் கால்நடை மருந்தகங்களைப் பொருத்தும் ஒவ்வொரு ஆண்டும் 10 கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.

LEGISLATIVE ... TAMIL NADU ... ALONE TRUST

திரு. எஸ். சிவராமன்: அமைச்சர் அவர்கள் ஒன்று முதல் மூன்று கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் எவ்வளவு ஒன்றியங்களில் கால்நடை மருந்தகங்கள் இயங்கி வருகின்றன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: 184 ஒன்றியங்களில் ஒன்று வீதம் 184 கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 184 மருத்துவமனைகள் இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், இந்த மருந்தகங்களிலே பட்டம் படித்த பட்டதாரி டாக்டர்களை நியமிக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகங்கள் எங்கெங்கே இருக்கின்றனவோ, அங்கே கால்நடை மருத்துவர்கள் அமர்த்தப் படுவார்கள். இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் கால்நடை மருத்துவர்கள் இல்லை. 10 மாதங்கள் பயிற்சி பெற்ற லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள்தான் பணியாற்றுகிறார்கள். அகவே, பி.வி.எஸ்ஸி., பட்டம் படித்த மருத்துவர்களை நியமிப்பதாக அரசு தெரிவித்ததே, அதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 2, 3 கால்நடை மருத்துவமனைகள் இருக்கின்றன. இதுபோக, சப் சென்டர்களில் கால்நடை உதவியாளர்கள் இல்லாமல், எந்தவிதமான வைத்திய உதவியும் இன்றி இருக்கிறதே, இந்த இடங்களிலே உதவியாளர்களை நியமனம் செய்ய வேண்டுமென்றால், பயிற்சிப் பள்ளிகள்கூட இல்லையே? ஆகவே, இந்த இடங்களிலே எப்படி, எந்த முறையிலே செயல்படுவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிவதோடு, இந்த கால்நடை உதவியாளர்கள் இல்லாத மருத்துவமனைகளிலே உடனடியாக அவர்களை நியமிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத காரணத்தால், தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

உ. அறிவிப்புகள்.

(அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

*திரு என். எஸ். வி. சித்தன்: பாயின்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசின்மீது கொடுக்கப்பட்ட கண்டனத் தீர்மானத்தின்மீது விவாதம் 4, 5 தேதிகளில் தொடரப்படும் என்று தாங்கள் அறிவித்தீர்கள். ஆனால், இன்றைய தினம் காலையிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு நான் ஒரு அறிவிப்பு தரப் போகிறேன். அதற்குப் பிறகு தாங்கள் பேச வேண்டிருக்காது. எனவே, உட்காருங்கள்.

திரு என். எஸ். வி. சித்தன்: எனக்குத் தாங்கள் பேச அனுமதி கொடுத்தீர்கள். எனவே, பேச அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதற்காக என்பதைப் பற்றித் தெரியாமல் முதலில் அனுமதி கொடுத்தேன். அது என்ன என்று தெரிந்த பிறகு, இப்போது அனுமதியை மறுக்கிறேன்.

திரு என். எஸ். வி. சித்தன்: அனுமதி கொடுத்துவிட்டு பாதியிலே நிறுத்துவது சரிதானா? எனவே தயவுசெய்து பேச அனுமதியுங்கள். சட்டசபையில் அ. தி. மு. க. அரசின்மீது கண்டனத் தீர்மானம் வந்திருக்கிறது. விவாதம் 4. 5 தேதிகளில் என்றிருந்தது. அதைத் தாங்கள் அறிவித்தீர்கள். இப்போது அதிலே மாற்றம் வந்திருக்கிறது. 5, 6 தேதிகளில் என்று இன்று காலை 'தினத் தந்தி' பத்திரிக்கையிலே வந்திருக்கிறது. இந்தச் செய்தி சரியா? சரி என்றால், இங்கே சபை நடந்து கொண்டிருக்கும்போது, இங்கே அறிவிப்பதற்கு முன்னரே இந்தப் பத்திரிகையில் வந்திருப்பது சரியா என்பதை நான் அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 12.20)

மாண்புமிகு பேரவத் தலைவர்: இதற்குத்தான் நான் உங்களைப் பேசவேண்டாம் என்று சொன்னேன். எதிர்க்கட்சித் தலைவர்களை எல்லாம் கலந்துதான் இந்த முடிவெடுக்கப் பட்டது. தலைவர்களுக்குத் தெரியும். உங்களுக்கு அவர்கள் சொல்லவில்லை. இதற்கு நான் பொறுப்பில்லை. உட்காருங்கள்.